மார்ச் 24-30

பாடம் 13

# உக்கிராணத்துவத்தின் விளைவுகள்



**மனன வசனம்**

**புறஜாதிகள் உங்களை அக்கிரமக்காரரென்று விரோதமாய்ப் பேசும் விஷயத்தில், அவர்கள் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு அவற்றினிமித்தம் சந்திப்பின் நாளிலே தேவனை மகிமைப்படுத்தும்படி நீங்கள் அவர்களுக்குள்ளே நல்நடக்கை உள்ளவர்களாய் நடந்துகொள்ளுங்கள். 1பேதுரு 2:12.**

**ஆராய்ச்சிக்கு**

**2தீமோ 3:1-9; எசேக்கியேல் 14:14;: பிலிப்பியர் 4:4-13; நீதி 3:5; 1பேதுரு 2:11,12; மத்தேயு 7:23; மத்தேயு 25:21.**

மார்ச் 24 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

உக்கிராணக்காரர்கள் தாங்கள் சேவிக்கும் தேவனுக்குச் சாட்சிகளாக வாழவேண்டும்; அதாவது, தங்களைச் சுற்றியுள்ளவர்கள்மத்தியில் வலுவான ஒரு தாக்கத்தை உண்டாக்க வேண்டும்; அது நல்ல தாக்கமாக இருக்கவேண்டும்.

அதற்காக உலகத்தைவிட்டு ஒதுங்கி வாழவேண்டுமென நினைக்கக்கூடாது. மாறாக, நாம் அறிந்துள்ளவற்றை அறியாதவர்களுக்கு, நல்லதொரு வாழ்க்கை வாழ்கிற விதத்தைக் காட்டுகிற சிலாக்கியம் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளதை அறியவேண்டும். பரிசுத்தமாக வாழும்படி தேவன் கொடுக்கிற அழைப்புக்கு உண்மையுள்ளவர்களாகச் செழித்து வளருவதுதான் உக்கிராணத்துவம். பூமியில் வேறு எப்படிப்பட்ட வாழ்க்கைமுறையிலும் கிடைக்காத ஒரு வாழ்க்கை வாழ்கிற திறனை தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார். 2கொரி 6:17. இதை மற்றவர்கள் கவனித்து, இதற்கான காரணத்தை மற்றவர்கள் நம்மிடம் கேட்கவேண்டும். அதற்காகத்தான் ‘கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்’ என்று வேதாகமம் சொல்கிறது. 1பேதுரு 3:15.

‘கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே’ உக்கிராணத்துவ வாழ்க்கை. இந்த வாழ்க்கையில் உள்ள தனிப்பட்ட நன்மைகளையும், ஆவிக்குரிய விளைவுகளையும், பிறர்மேல் நாம் ஏற்படுத்துகிற தாக்கத்தையும், இந்த வாழ்க்கையில் நாம் மனரம்மியமாக வாழ்வதற்கான இரகசியத்தையும் இந்தக் கடைசிப் பாடத்தில் ஆராய்வோம்.

2017, மார்ச் 31 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## உக்கிராணத்துவமும் தேவபக்தியும்

தேவபக்தி என்பது பெரியதொரு தலைப்பு. தேவபக்தியுள்ளவர்கள் பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வார்கள். தீத்து 1:3. அர்ப்பணிப்புமிக்க மனநிலையோடு தேவனுக்கு பிரியமானவைகளைச் செய்து, கிறிஸ்துவைபோல மாறுவார்கள். சங் 4:3; தீத்து 2:12. நம்முடைய நம்பிக்கை மெய்யானதா என்பதற்கு தேவபக்தியே சாட்சியாகும்; மேலும், நித்திய வாழ்வின் வாக்குறுதிகளையும் இது சொந்தமாக்குகிறது. எந்தத் தத்துவத்தாலும் ஆஸ்தியாலும் புகழாலும் அதிகாரத்தாலும் உயர் பிறப்பாலும் இப்படிப்பட்ட வாக்குறுதியைத் தரமுடியாது.

***உண்மையுள்ள உக்கிராணக்காரனுடைய வாழ்க்கையோடு நேரடியாகத் தொடர்புடைய என்ன விஷயங்கள் குறித்து 2தீமோ 3:1-9இல் பவுல் எச்சரிக்கிறார்?***

---

---

யோபுவின் குணத்தையும் செயல்களையும்பற்றி யோபு புத்தகத்தில் வாசிக்கிறோம். உபத்திரவத்தின்மத்தியிலும் தேவபக்தியான வாழ்க்கை வாழ்வதுபற்றி அப்புத்தகம் எடுத்துக்காட்டுகிறது. அப்படிப்பட்ட வாழ்க்கையை சாத்தான் எவ்வளவாக வெறுக்கிறான் என்பதையும் அங்குக் காணமுடிகிறது. யோபின் விசுவாசத் தரத்திற்கும், வாழ்க்கைத் தரத்திற்கும் யாருமே ஒத்திருக்கவில்லை என்று தேவன்தாமே கூறுகிறார். யோபு 2:3.

'ஊத்ஸ் தேசத்திலே யோபு என்னும் பேர்கொண்ட ஒரு மனுஷன் இருந்தான்; அந்த மனுஷன் உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாய் இருந்தான்.' யோபு 1:1. யோபுவும் சில சமயச்சடங்குகளைச் செய்தவர்தான்; யோபு 1:5. ஆனால், அவரது விசுவாசம் வெறும் வார்த்தைகளாகவோ, சடங்குகளாகவோ இல்லை. கொடும் சோதனைகளுக்குமத்தியிலும் தேவபயத்தோடு தன் வாழ்நாள்முழுவதிலும் பக்தியுள்ளவராக வாழ்ந்தார். பக்தியுள்ளவர்கள் என்றால், பூரணமானவர்கள் என்று அர்த்தமல்ல; மாறாக நம்மால் இயன்றவரையிலும் பூரணத்தன்மையை வெளிப்படுத்துவதாகும்.

***எசே 14:14இல் சொல்லப்படும் நபர்கள்பற்றி அந்த வசனம் சொல்வது என்ன? நம் எல்லோர் வாழ்க்கையிலும் இருக்கவேண்டிய என்ன பொதுவான செய்தி அதில் உள்ளது?***

---

---

---

தேவபக்தியான வாழ்க்கையின் வெளிப்பாடே உக்கிராணத்துவம். உண்மையுள்ள உக்கிராணக்காரர்கள் தேவபக்தியின் வேஷத்தைத் தரித்தவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் வாழும்விதத்திலும், தேவன் அவர்களிடம் ஒப்படைத்திருப்பவற்றை அவர்கள் கையாளுகிறவிதத்திலும் அந்தத் தேவபக்தி வெளிப்படும். அவர்கள் எதைத் செய்தாலும், எதைச் செய்யாமலிருந்தாலும் அவர்களுடைய விசுவாசமே அதற்குக் காரணமாக இருக்கும்.

*என் குறைச்சலினால் நான் இப்படிச் சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாய் இருக்கக் கற்றுக்கொண்டேன். பிலி 4:11.*

**நாம் எப்படிப்பட்ட நிலையில் இருந்தாலும், மனரம்மியமாக இருக்கவேண்டுமானால், யாரால் அது சாத்தியமாகும்?**

---

---

தீமோத்தேயுவுக்கு பவுல் எழுதும்போது, 'தேவபக்தியை ஆதாயத் தொழிலென்று' சிலர் எண்ணுவதாகச் சொல்லுகிறார். 1தீமோ 6:5. இன்று தொலைக்காட்சிப் பிரசங்கிமார்கள் சிலர் இப்படிப்பட்டவர்களாக இருக்கிறார்கள். விசுவாசிகள் உண்மையுள்ளவர்களாக இருந்தால், தேவன் அவர்களை ஐசுவரியவான்களாக்குவார் என்று பிரசங்கித்து, நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். இவர்களுடைய ஊழியங்களுக்கு உதவுவதும் 'உண்மையாக இருப்பதில்' அடங்கும் என்பார்கள். உண்மையாக இருப்பவர் ஐசுவரியவானாகலாம் என்பது, கிறிஸ்தவமார்க்கத்தின் போர்வையில் போதிக்கப்படும் லௌகீகக் கருத்தாகும்.

தேவபக்திக்கும் ஐசுவரியத்திற்கும் சம்பந்தமில்லை. இன்று உலகத்தில் மிக மோசமான சிலர்தான் பெரிய பணக்காரர்களாக இருக்கிறார்கள்; அவர்களை பக்திமான்களென்று சொல்லமுடியுமா? அதனால்தான் பவுல், 'போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம்' என்று சொல்கிறார். 1தீமோ 6:6. எந்தச் சூழ்நிலையாக இருந்தாலும், போதுமென்கிற மனதுடனேகூடிய தேவபக்திதான் மிகப்பெரிய ஐசுவரியமாகும்; ஏனென்றால், பணஆதாயத்தைவிட தேவ கிருபை விலையேறப்பெற்றதாகும். எனவே, 'உண்ணவும் உடுக்கவும்' இருந்தால் போதுமென்கிற எண்ணம் வரவேண்டும். 1தீமோ 6:8. மனரம்மியம்மட்டும் இல்லையென்றால், எவ்வளவுதான் இருந்தாலும், "இன்னும் வேண்டும், இன்னும் வேண்டும்" என்கிற தூண்டல் விரட்டிக்கொண்டே இருக்கும்.

'எல்லா நிலையிலும் மனரம்மியத்தோடு இருப்பது மிகப்பெரிய கலை; ஆவிக்குரிய ஓர் இரகசியமும் கூட. இது என்ன இரகசியம் என்று நாம் கற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்தவ மனரம்மியமானது இனிமையானதும் உள்ளானதும் அமைதலானதும் அருமையானதுமான மனநிலையாகும்; ஒவ்வொரு சூழ்நிலையிலும் தேவனுடைய ஞானத்திற்கும், தந்தைபோன்ற அவர் அன்பிற்கும் எந்தத் தடையுமின்றி கீழ்ப்படிவதில் ஆனந்தம் அடைவோம். இது விலைமதிப்பற்ற ஒரு தைலம்; இதமளிக்கக்கூடியது; துன்ப நேரங்களிலும் இக்கட்டுச் சூழ்நிலைகளிலும் கலங்கின இருதயங்களைத் தேற்றக்கூடியது.' - ஜெரேமியா பரோஸ், *The Rare Jewel of Christian Contentment (London: Publisher W. Bentley, 1651), pp. 1, 3.*

நாம் மனரம்மியத்தோடு வாழ உதவும் நியதிகள் யாவை? ரோமர் 8:28; எபி 13:5; பிலி 4:4-13.

***நீதி 3:5 சொல்லும் முக்கியச் செய்தி என்ன? குறிப்பாக, சுயபுத்தியின்மேல் சாயாமல் என்பதின் முக்கியத்துவம் என்ன? ஏசா 55:9; 1கொரி 4:5; 1கொரி 13:12.***

'உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாக' இருப்பதுதான் தேவனுடைய உக்கிராணக்காரரின் குறிக்கோளும் நோக்கமுமாக இருக்கவேண்டும். நீதி 3:5.

இதைச் சொல்வது எளிது, செய்வது கடினம். தேவன் இருக்கிறாரென்று நம்பியும், அவர் நம்மேல் அன்போடும் அக்கறையோடும் இருக்கிறாரெனத் தெரிந்தும், ஏதாவது கஷ்டம் வந்தால் எத்தனை முறை கவலைப்பட்டிருக்கிறோம்? எதிர்காலம் அவ்வளவுதானா என்கிற திகிலும் நமக்குள் வருவதில்லையா?

அப்படியானால், தேவனுடைய உக்கிராணக்காரர்களாக எவ்வளவு தூரம் நாம் அவரை நம்பவேண்டும்? விசுவாசத்தோடு கால்வைத்து, ஒவ்வொன்றிலும் ஆண்டவருக்குக் கீழ்ப்படியவேண்டாவா? நம்பிக்கை என்பது மனதில் உருவாவது; ஆண்டவர்மேல் நம்பிக்கை வைக்கவைக்க அது வளருமே தவிர குறையாது. தேவன்மேல் நமக்கு நம்பிக்கை இருக்கிறது என்பதற்கு உண்மையான உக்கிராணக்காரர்களாக வாழ்வதே எடுத்துக்காட்டாகும். உக்கிராணக்காரரின் அடித்தளமாகவும் ஊக்குசக்தியாகவும் இந்த நம்பிக்கை இருக்கும்; நம் செய்கைகளில் எல்லாம் இது வெளிப்படும்.

'கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூருவாயாக' மத் 22:37. 'முழு இருதயம்' என்பது வேதாகமம் முழுவதிலும் ஓர் உருவகமாக வருகிறது. நம் ஒழுக்க நிலைத் தீர்மானங்களின் பிறப்பிடம் அது; நாம் யாரென்பதைக் காட்டுவது அது. அதாவது, நம் குணமும் நோக்கங்களும் எண்ணங்களும் அதில் அடங்குகின்றன.

நம்மால் கட்டுப்படுத்த முடியாத விஷயங்களில் தேவனை நம்புவது எளிது; ஏனென்றால், அவற்றில் அவரை நம்புவதுதவிர வேறு வழியில்லை. மாறாக, நம் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு விஷயத்தில் தீர்மானம்செய்யவேண்டிய நிலையில், 'இருதயத்திலிருந்து' வருவதுதான் மெய்யான நம்பிக்கை; அவர் மேல் நமக்கு இருக்கிற நம்பிக்கையை வைத்தே அப்போது நாம் தீர்மானம்செய்வோம்.

அப்போஸ்தலர்கள் தங்கள் முழு இருதயத்தோடும் தேவனை நம்பினார்கள். 'இப்போது ஊழியப்பணியில் உள்ள எந்த ஒரு மனுஷனையும்போலவே அவர்களும் இயல்பிலேயே பெலவீனர்களாகவும் திக்கற்றவர்களாகவும் இருந்தார்கள்; ஆனாலும், ஆண்டவரை முழுவதுமாக நம்பினார்கள். மனதிலும் ஆத்துமாவிலும் பண்பாடு உடையவர்களாக இருந்ததே அவர்கள் பெற்றிருந்த செல்வம்; தேவனை முதலும் கடைசியும் எல்லாமுமாகக் கருதும் அனைவரும் இப்படியே இருப்பார்கள்.' - *EGW, GW, p 25.*

நம் கட்டுப்பாட்டிற்கு மிஞ்சின விஷயங்களில் தேவனை நம்புவது எளிதுதான். ஆனால், நம் கட்டுப்பாட்டில் உள்ளவற்றில் அவரை நம்புவோமா? நீங்கள் செய்யும் தீர்மானங்கள் தேவன்மேல் நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கையிலிருந்து உருவாகவேண்டுமானால், என்னனென்ன மாற்றங்களை நீங்கள் செய்யவேண்டியுள்ளது?

'முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்.' எபே 5:8. இருதயத்தின் மாற்றம் வெளிப்படையாகக் காணப்படக்கூடியதென்று பவுல் கூறுகிறார். நாம் ஒளியிலே நடந்தால், இருண்டுபோயுள்ள ஓர் உலகில் பிரகாசமான ஒளியாக நம் உக்கிராணத்துவ நடத்தை தினமும் ஒளிவீசும். 1யோவான் 1:7; ஏசா 30:21.

'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்' என்று இயேசு சொன்னார். யோவான் 8:12. நம் அனுதின வாழ்வில் ஒழுக்கமானவர்களாக நடந்துகொள்ளும்போது, தேவனுடைய வெளிச்சத்தை நாம் பிரதிபலிக்கிறோம்.

***தேவனுக்கு மகிமை கொண்டுவரும்விதத்தில் நம் உக்கிராணத்துவம் வெளிப்பட நாம் என்ன செய்யலாம்? நம் செல்வாக்கு எப்படிப்பட்ட தாக்கத்தை மற்றவர்கள்மேல் உண்டாக்குகிறது? மத் 5:16; தீத்து 2:78; 1பேதுரு 2:11,12.***

தேவனுக்குச் சொந்தமானவற்றை நிர்வகிப்பதே உக்கிராணத்துவம்; அதோடு பொறுப்பு முடிவதில்லை. நம் குடும்பங்களுக்கும் சமுதாயத்திற்கும் உலகத்திற்கும் பிரபஞ்சத்திற்கும் நம் உக்கிராணத்துவம் காட்சிப்பொருளாக இருக்கிறது. 1கொரி 4:9. நம்முடைய அலுவல்களில் நம் உக்கிராணத்துவம் வெளிப்படும்; ராஜ்யத்தின் நியதிகள் நம் வாழ்க்கையில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களை விவரித்துக்காட்டும். இப்படியாக மற்றவர்கள்மேல் நாம் தாக்கத்தை உண்டாக்கலாம். சிருஷ்டிகர் விரும்புகிற அன்பும் ஒழுக்கமும் உள்ளவர்களாக கிறிஸ்துவை வெளிப்படுத்தலாம்.

நம் பணி நெறிமுறைகளும்கூட நம் உக்கிராணத்துவ நெறிமுறைகளுக்கு ஒத்திருக்கவேண்டும். நீதிமானின் உக்கிராணத்துவத்தைக் காட்டுகிற ஒரு மேடையாக நாம் செய்கிற பணி இருக்கிறது. 'உன் நீதியை வெளிச்சத்தைப் போலவும், உன் நியாயத்தைப் பட்டப்பகலைப்போலவும் விளங்கப்பண்ணுவார்.' சங் 37:6. உக்கிராணக்காரன் செய்யும் வேலை அல்லது தொழிலிலும் அவனது தாக்கம் இருக்கும்; அது 'மறைவிடத்திலாவது, மரக்காலின் கீழேயாவது' இருக்காது. லூக் 11:33; மாறாக மலையின்மேல் இருக்கிற பட்டணம்போல இருக்கும். மத் 5:14. இதை மனதில் வைத்து வீட்டிலும் வேலைசெய்கிற இடத்திலும் நடந்துகொண்டால், உங்களைச்சுற்றியுள்ளவர்களின் இருதயங்களிலும் நீங்கள் தாக்கத்தை உண்டாக்கமுடியும்.

'இயற்கையிலுள்ள ஒவ்வொன்றிற்கும் தேவன் ஒரு வேலை தந்திருக்கிறார்; தங்கள் நிலைகுறித்து அவை முறுமுறுப்பதில்லை. ஆவிக்குரிய விஷயங்களிலும் ஒவ்வோர் ஆணுக்கும் பெண்ணுக்கும் அவரவருக்கென்று ஒரு தொழிலும் செயற்களமும் தந்திருக்கிறார். கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மிடம் அவர் தந்துள்ள மூலதனத்தை நாம் சரியாகப் பயன்படுத்துகிறோமா என்று தேவன் பார்க்கிறார். மெய்யொழுக்கம் உள்ளவர்களாக உங்களை மாற்றுகிற உறுதியான நடத்தையைக் காட்ட, இதுவே நேரம்; இதுவே நம் சிலாக்கியம்.' – *EGW, TDG, p 243.*

உங்களுடைய குடும்பத்தில், அல்லது நீங்கள் வேலைசெய்கிற இடத்தில் உங்களைச்சுற்றி உள்ளோருக்கு உங்களுடைய பணி நெறிமுறை எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகிறது? உங்கள் விசுவாசம்பற்றி அது எப்படிப்பட்ட செய்தியைச் சொல்லுகிறது?

## நாம் கேட்க விரும்புகிற [கேட்க விரும்பாத] வார்த்தைகள்

பூமியில் நாம் அந்நியர்களும் பரதேசிகளுமாக இருக்கிறோம்; அழகும் பூரணமும் சமாதானமும் நிறைந்த பரலோகம்தான் இறுதியில் நாம் வாழப்போகிற இடம். எபி 11:13,14. அதுவரை இங்குதான் நாம் வாழவேண்டும். இங்கும் ஒன்று தேவனுக்காக வாழவேண்டும், அல்லது சாத்தானுக்காக வாழவேண்டும். இதில் இடைப்பட்ட நிலை எதுவும் இல்லை; மாபெரும்போராட்டம் இதையே நமக்கு வெளிப்படுத்தியுள்ளது. 'என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.' மத் 12:30. இயேசு திரும்ப வரும்போது நாம் யார் பக்கம் இருக்கிறோம் என்பது தெளிவாகவும் சந்தேகத்திற்கு இடமின்றியும் தெரியவரும்.

**கிறிஸ்து வந்த பிறகு ஒரு கட்டத்தில், அவரைப் பின்பற்றுவதாகக் கூறிவந்தவர்களிடம் இரண்டு சொற்றொடர்களில் ஒன்று சொல்லப்படுகிறது; அவை யாவை? அவற்றின் அர்த்தம் என்ன?**

*மத்தேயு 25:21* ________________________________________

*மத்தேயு 7:23* ________________________________________

'நல்லது' என்று கிறிஸ்து சொல்வதுதான் ஓர் உக்கிராணக்காரன் கேட்பதிலேயே மிகவும் மகிழ்ச்சியானதும் மனநிறைவானதுமான வார்த்தையாக இருக்கும். நமக்குத் தகுதியில்லாவிட்டாலும், தேவனுக்குச் சொந்தமானவற்றை நிர்வகிக்க நம் முழுத் திறமைகளோடும் நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளை அவர் அங்கீகரிப்பது சொல்லமுடியாத மகிழ்ச்சியைத் தரும்; ஏனெனில், நம்முடைய இரட்சிப்பானது நம்முடைய கிரியைகளைச் சார்ந்தல்ல, நமக்காக கிறிஸ்து செய்த கிரியைகளைச் சார்ந்தே இருக்கிறது என்பதை வழிநெடுகிலும் அறிந்திருப்போம்.

ஓர் உண்மையுள்ள உக்கிராணக்காரனின் விசுவாசத்தை அவனுடைய வாழ்க்கை வெளிப்படுத்தும். தங்கள் கிரியைகளை வைத்து தங்களை தேவனுக்கு முன் நியாயப்படுத்த முயன்றவர்கள்தாம், கிரியைகளினால் இரட்சிப்பு கிடைப்பது போல பேசினார்கள். மத் 7:21,22. அவர்களுடைய சுயநியாய மனப்பான்மை எவ்வளவு வீணானது என்பதை மத்தேயு 7:23 காட்டுகிறது.

"கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அவருக்குச் சொந்தமானதை மீண்டும் அவரிடமே கொடுக்கும்போது, தங்கள் பொக்கிஷத்தை தாங்கள் பரலோகத்தில் சேர்த்ததை 'நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி' எனும் வார்த்தைகள்மூலம் அறிந்துகொள்கிறார்கள்." - *EGW, DA, p 523.*

உக்கிராணக்காரரின் வாழ்வில் இரண்டு பெரும் கற்பனைகள்தாம் ஊக்கச் சக்திகளாகவும், உந்து சக்திகளாகவும் இருந்திருக்கும். அவை: 'தேவன்மேல் அன்புகூருவாயாக, பிறமனிதர்கள்மேல் அன்புகூருவாயாக' என்பவைகளே.

உங்களுடைய வாழ்க்கையும் உக்கிராணத்துவமும் எவ்வளவுக்கு இந்த இரு பெரும் கற்பனைகளை வெளிப்படுத்துகிறது?

'தேவ அன்பை வெளிப்படுத்தவே கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்தார். அவர் தொடங்கிவைத்த ஊழியத்தை அவரைப் பின்பற்றுகிறவர்கள் தொடரவேண்டும். ஒருவரையொருவர் பெலப்படுத்தவும் ஆதரிக்கவும் பாடுபடுவோம். பிறர் நலனை நாடுவதே மெய்சந்தோஷத்திற்கான ஒரே வழி. தேவனையும் பிற மனிதர்களையும் நேசிக்கும் எவரும் கெட்டுப்போவதில்லை. எவ்வளவுக்கு சுயநலமின்றி இருக் கிறானோ, அவ்வளவுக்கு சந்தோஷமாக இருப்பான்; ஏனென்றால், தன்னைக் குறித்த தேவநோக்கத்தை அவன் நிறைவேற்றுகிறான்.' – *EGW, CS, p 24,25.*

'உயிருள்ள சபை பெருகும், அதில் வளர்ச்சி இருக்கும். வாங்குவது கொடுப் பது, தேவனுக்குச் சொந்தமானவற்றைப் பெறுவது திரும்பச்செலுத்துவது என நிலை யான ஒரு பரிமாற்றம் நிகழும். ஒவ்வோர் உண்மையான விசுவாசிக்கும் தேவன் வெளிச்சமும் ஆசீர்வாதமும் தருகிறார்; ஆண்டவருக்குச் செய்யும் ஊழியத்தின்மூலம் பிறருக்கு அவன் இவற்றை வழங்குகிறான். தான் பெற்றதை அவன் கொடுக்கும்போது, பெறுவதற்கான அவனுடைய திறன் வளருகிறது; புதிதாக கிருபையையும் சத்தியத்தை யும் பெறுவதற்கு இடமுண்டாகிறது; அவனுடைய வெளிச்சம் தெளிவாகிறது; அறிவு பெருகுகிறது. இவ்வாறு பெறுவதையும் கொடுப்பதையும் பொறுத்தே சபையின் ஜீவனும் வளர்ச்சியும் உள்ளது. பெற்றும் கொடுக்காமல் இருக்கிறவன், சீக்கிரமே தான் பெறுகிற திறனை இழந்துபோவான். அவன் பிறருக்கு சத்தியத்தைச் சொல்லா விட்டால், அதைப் பெறுவதற்கான திறனை இழக்கிறான். புதிதுபுதிதாக ஆசீர் வாதத்தைப் பெறவேண்டுமானால், பரலோக நன்மைகளை பிறருக்குப் பகிர்ந்தளிக்க வேண்டும்.' – *EGW, CS, p 36.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *தேவனை நம்புவது எவ்வாறு மனரம்மியத்தைத் தருகிறது? அறிவுப்பூர்வ மாக நாம் தேவனை முழுமனதோடு நம்புவதற்கு என்ன செய்யவேண்டும்? 2கொரி 10:5. சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்று சொல்வதை விட, அதை நம்புவது ஏன் கடினம்? ரோமர் 8:28. அறிவுப்பூர்வமாக நாம் தேவனை நம்பியும், எதிர்காலம்குறித்த பயம் வருவது எதனால்?*
2. *உக்கிராணத்துவம்பற்றி 25 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதுங்கள். உக்கிரா ணத்துவம் எவ்வாறு கிறிஸ்தவ வாழ்க்கையில் ஒரு முக்கிய அம்சமாக இருக் கிறது என்பதுபற்றியும் 25 வார்த்தைகளுக்கு மிகாமல் எழுதுங்கள்.*
3. *மத் 7:21-23இல், ஆண்டவரிடம் மக்கள் சொல்வது என்ன? அவர்களைப் பற்றி என்ன தெரிகிறது? நாமும் நல்ல உக்கிராணக்காரர்களாக, விசுவாச மும் கீழ்ப்படிதலும் உள்ளவர்களாக, தேவனுடைய நாமத்தில் நற்கிரியை களைச் செய்கிறவர்களாக வாழப் பிரயாசப்படும்போது, இதேவித சுய வஞ்சகத்தில் சிக்காமல் இருக்க நாம் என்ன செய்யலாம்?*
4. *கிறிஸ்தவ செல்வாக்கு என்பதை தனிமனித அளவில்தான் பார்க்கிறோம். சபையளவில் எவ்வாறு செல்வாக்கு உண்டாக்கமுடியும்? சமுதாயத்தில் உங்கள் சபை எப்படிப்பட்ட தாக்கத்தை உண்டாக்குகிறது?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*